திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் சேமிப்புக் கிடங்குகள் எத்தனை? சொந்தமான கட்டிடங்களில் இருக்கின்ற சேமிப்புக் கிடங்குகள் எத்தனை என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய விவரங்களை அறிய தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதல் நிலையம் வேறு; கிடங்குகள் வேறு; எனது தொகுதியில் மானோஜிபட்டியில் நெல் மூட்டைகளைக் கொண்டு வந்து தரையிலே அடுக்கியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்துதல்.

*7104. திரு. பெ.சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு, மாநில அரசின் உணவுத்துறை செயலாளர்களின் கூட்டத்தை டெல்லியில் கூட்டி சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் ஆலோசனைப்படி 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய 4 மாதங்களில் சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரையைக் குவிண்டால் ரூ. 640-க்குக் குறைந்த விலையில் வாங்கி, கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகள் மூலம் கிலோ ரூ. 7.50 என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 5]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு நியாய விலைக் கடைகளில் நாம் விற்பதற்குத் தேவையான சர்க்கரை எவ்வளவு? அதை மத்திய அரசு வழங்குகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான அளவு சர்க்கரையை மத்திய அரசு வழங்கவில்லை. ஒருவருக்கு 425 கிராம் என்ற அடிப்படையிலேதான், சர்க்கரை இப்போது மத்திய அரசு நமக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே, நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கவேண்டிய சர்க்கரை போதுமானதாக இல்லை. அதனால், பொது மக்கள் மார்க்கெட்டிலே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே, மத்திய அரசாங்கம் சர்க்கரை விலையைக் குறைக்க வேண்டுமென்ற அளவிலே, செய்திகள் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கின்றனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அத்தகைய சர்க்கரையைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரையினுடைய அளவு, நியாய விலைக் கடைகளிலே பொது மக்களுக்கு வழங்குகின்ற அளவு இல்லாமல், குறைவாகத்தான் இருக்கிறது. இன்னும் அதிகமாகத் தர வேண்டுமென்ற அடிப்படையிலே, மத்திய அரசுடன் நம்முடைய அரசின் சார்பாகக் கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறோம். இப்போது, மத்திய அரசு சர்க்கரை விலையைக் குறைப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் அடிப் படையில், நேற்றைய தினம் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 7.90 ஆக இருந்தது. இன்றைய தினம் ரூ. 7.50 ஆக குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில், சர்க்கரை விலையைக் குறைப்பதற்கும், சர்க்கரையைப் போதுமான அளவு வாங்கி சாப்பிடக்கூடிய நுகர்வோர்களுக்கு வழங்குவதற்கும், மாநில அரசு, மத்திய அரசுடன் இணைந்து முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் உணவுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உணவுத் துறை அதிகாரிகள் கூட்டத்தை அடிக்கடி கூட்டு

வதை நாங்கள் அறிகிறோம். உணவுத் துறை முக்கியமான துறை என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, உணவுத்துறை கூட்டத்தை, மாவட்டம் தோறும் கூட்டி ....(மணியடிக்கப்பெற்றது).

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நியாயவிலைக் கடைகளில் கொடுக்கக்கூடிய சர்க்கரை மிகவும் குறைவாக இருந்து, போதாமல் அதனால் வெளிமார்க்கெட்டில் வாங்குவதாகச் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றவுடன், இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அதாவது கூடுதலாக சர்க்கரையும், விலை குறைவாகவும் கிடைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே குடும்ப அட்டைகளுக்கு சர்க்கரையினுடைய அளவு அதிகமாக வழங்கவேண்டும். தற்போது அதிகபட்சமாக 2 கிலோ சர்க்கரை ஒரு குடும்ப அட்டைக்கு வழங்கப்படுகிறது; எனவே, அதிகமாக வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளின் அடிப்படையில், மத்திய அரசை நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தவகையில் மேலும் சர்க்கரை ஒதுக்கீட்டை அதிகமாக்கி மத்திய அரசு நமக்கு வழங்குமேயானால், அதிகமான அளவு சர்க்கரை நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

9-20 மணி

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் இருப்பவர்களுக்கு ஒரு நபருக்கு 800 கிராம் சர்க்கரை கொடுக்கப்படுகிறது. அதேபோல், தமிழ் நாட்டில் நியாயவிலைக் கடைகளில் 800 கிராம் ஒரு நபருக்கு கொடுக்கப்படக்கூடிய வகையில் மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தமிழகத்திற்கு அதிகமாக சர்க்கரை வேண்டுமென்று சொல்லப்படுகிற காரணங்களில் ஒன்றாக டெல்லியிலே அதிக அளவு சர்க்கரை கொடுக்கப்படுகிறது. எனவே, தமிழகத்திலேயும் அளவு அதிகமாகத் தரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் நாம் மத்திய அரசைத் தமிழக அரசின் சார்பாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு தேவைக்கேற்ற சர்க்கரை கொடுக்க வில்லை என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 5]

ஆனால் நமக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரையும் கூட காலாகாலத்திலே அந்த அளவுப்படி கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் அங்கே அந்த நியாயவிலைக் கடைகளிலே எங்களுக்கு கொடுப்பதே குறைவாகத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இரண்டு அல்லது ஒரு கிலோ கொடுப்பதையே அவர்கள் சரியான முறைப்படி கொடுப்பதற்காக, பாலிதின் பைகளில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு முழுவதும் காலத்தே கொடுக்கப்படுகிறது. ஆனால் எடைக் குறைவாக எங்கேயாவது இருக்குமேயானால் அது குறித்து தனித்து புகார்கள் கொடுத்தால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. இன்னொரு கருத்தைச் சொன்னார்கள், பாலிதின் பைகளில் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு நுகர்வோர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதுதான் கேள்விக்குறி. காரணம் கொஞ்சம் விலை அதிகமாக விற்கவேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்படுகிறது. அதனாலேதான் அதை நுகர்வோர்கள் அல்லது நுகர்வோர்கள் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளுமா என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இன்றைக்கு நேரிடையாக எடைபோட்டு வழங்கப்படுகிறது. உறுப்பினர் தெரிவித்தபடி எங்கேயாவது எடைக் குறைவாக இருக்குமேயானால் அதைக் குறிப்பிட்டு அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் உடன் கடுமையான நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம்.

* 9862, திரு. எஸ். சிவலோகம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரம் நகரில் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிதிநிலை நெருக்கடி காரணமாகவும், செலவினில் அரசு சிக்கனத்தைக் கடைப்பிடித்து வருவதாலும், புதிய சரகத் துணைப்பதிவாளர் அலுவலகம் அமைக்க வாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS